**மினுவாங்கொட நகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மினுவாங்கொட நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மினுவாங்கொட நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் விரிவான முகாமைத்துவ அறிக்கையில் பின்வரும் இலக்கங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.2.2(இ) 1.2.5 (ஆ), 2.2.2, 3.2(ஆ)( இ), 3.3.1, 3.4 மற்றும் 3.5

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமங்களுடனான தொடர்பு இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியம இலக்கம் 18.7 மற்றும் LGD/10A/4/ந.கி/2019 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் தளபாடங்களும் பொருத்திகளும், சபைக்குச் சொந்தமான வீதிகள், நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சபைக்குச் சொந்தமான 11 காணிகள் என்பன மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நியம இலக்கம் 9.9 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 10 இன் கீழ் மூலதன செலவின மானியப் பெறுவனவுகளில் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள், மிகையில் இனங்காணப்பட்ட மானியமாக குறைத்து சேமிப்பு தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனத்தின் கீழ் மிகையில் இனங்காணப்படாமல் மானியத்தின் கீழ் குறிப்பிடப்படல் வேண்டும். எனினும் கிடைத்த ரூபா 11,961,854 நிதிஏற்பாடுகளில் மீளாய்வாண்டில் ரூபா 4,395,902 நிதிஏற்பாட்டு தொகையும் குறிப்பு இலக்கம் 05 இன் கீழ் நடைமுறையல்லாத செலவினத்திற்காக அரசாங்கத்திலிருந்து கிடைத்த மாற்றல்களின் கீழ் ஆண்டின் வருமானத்தில் சீராக்கப்பட்டமையால் அப்பெறுமானத்தால் மிகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | உள்ளூராட்சி நிறுவனங்களுக் கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | நியம இலக்கம் 9.9 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 10 இன் கீழ் மூலதன செலவின மானியங்களின் பெறுவனவுகளில் ஆண்டின் கொடுப்பனவுகள் மிகையில் இனங்காணப்பட்ட மானியமாக குறைத்து சேமிப்பு தேறிய சொத்துக்கள் /உரிமை மூலதனத்தின் கீழ் இனங்காணப்படாமல் மானியத்தின் கீழ் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் சேமிப்பான ரூபா 7,565,952 தொகை அவ்வாறு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |

**1.6.2 கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் பின்பற்றுதல் மற்றும் வழிகாட்டுதலின் கீழான EG 3.1 இன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் வேலைகளுக்கான ரூபா 33,728,431 பெறுமதி நடைமுறை வேலையாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் நாட்குறிப்பின் மூலம் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் ஆண்டின் மிகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்குகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2020 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய LGD/09/2019(1) ஆம் இலக்க மாதிரிப்படிவ சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றுக்களுக்கான மாதிரிகள் 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களுக்காக சரியாக உரித்தாக்கிக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | மாதிரிகளை சரியாக உரித்தாக்குதல் வேண்டும். |
| (இ) | மாற்றல் கொடுக்கல் வாங்கல்களில் பெறவேண்டியதாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 654,217 பெறவேண்டிய நிலையான வைப்பு வட்டிப் பணம் முற்கொடுப்பனவு மற்றும் பெறவேண்டிவைகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மாற்றல் கொடுக்கல் வாங்கல்களை பெற வேண்டியவைகளின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

**1.6.3 நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2021 பெப்ரவரி 12 ஆந் திகதிய LGD/10A/4/ந.கி/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 06 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் மூலம் / நிறுவனத்திற்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான நடவடிக்கைகள் தொடர்பாக குறிப்பொன்றின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சரியாக வெளிப்படுத்துதல் வேண்டும். |

**1.6.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | இயந்திரம், தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் மொத்த மீள்மதிப்பீட்டு பெறுமதியான ரூபா 15,046,040 பெறுமதி, இயந்திரம் மற்றும் தளபாடக் கணக்கில் தனித்தனியாக கணக்கீடு செய்யப்படாமல் மொத்த தொகையும் இயந்திரக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது தனித்தனியாக மீள்மதிப்பீட்டு பெறுமதி கணக்கீடு செய்யப்படும் என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நன்கொடையாக கிடைத்த நூலக புத்தகம் ரூபா 123,997 பெறுமதியொன்று தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனத்தின் கீழ் கணக்கீடு செய்வதற்கு பதிலாக குறுங்கால செலுத்த வேண்டியதன் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இருப்பு மீதியில் உள்ளடங்குமாறு காண்பிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | சகல நிறுவைகளும் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | நாட்குறிப்பு பதிவின் மூலம் நானாவித செலவினக் கணக்கில் வரவு மற்றும் | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நானாவித கடன்கொடுத்தோரில் செலவு வைத்து ரூபா 40,155,600 தொகை ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மேலும் நாட்குறிப்பு பதிவொன்றின் மூலம் களஞ்சிய வழங்கல் கடன்கொடுத்தோரின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா 1,364,112 நானாவித கடன்கொடுத்தோர் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தமையினால் களஞ்சிய வழங்கல் கடன்கொடுத்தோர் ரூபா 1,364,112 தொகை இருதடவை கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | |
| (ஈ) | குறிப்பு இலக்கம் 16 இன் பிரகாரம் பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஆண்டின் ஆரம்ப பெறுமதி ரூபா 8,998,093 மற்றும் அவற்றின் ஆண்டில் சேர்த்தல்கள் ரூபா 300,630 ஆக இருந்த போதிலும் அப்பெறுமதி நாட்குறிப்பின் மூலம் திரண்ட நிதியத்தில் பதியப்பட்டதன் மூலம் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்களின் பெறுமதி பூச்சிய பெறுமதியை கொண்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (உ) | சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்யும் போது ஏற்படுகின்ற வேறுபாடுகள் இருப்பு மற்றும் ஒதுக்க கணக்கில் சீராக்கப்பட்டிருந்த போதிலும் மீள்மதிப்பீட்டின் போது சொத்துக்களின் பெறுமதி அதிகரித்தல் ரூபா 1,133,243,389 ஆக இருந்த போதிலும் இருப்பு கணக்கில் நாட்குறிப்பின் மூலம் ரூபா 1,132,942,759 தொகை கணக்கீடு செய்யப்பட்டமையால் மீள்மதிப்பீட்டு பெறுமதி அதிகரிப்பு ரூபா 300,630 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சகல சொத்துக்களும் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மிகை ரூபா 5,039,859 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 30,511,099 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மினுவாங்கொட நகரத்தில் 2019 மே 13 ஆந் திகதி ஏற்பட்ட குழப்ப நிலையின் அடிப்படையில் மத்திய பொதுச் சந்தைத் தொகுதியின் 32 கடைகளுக்கு சேத நட்டங்கள் ஏற்பட்ட சந்தர்ப்பத்தின் போது உடன்படிக்கை செய்திருந்த 7 வாடிக்கையாளர்களுக்கும் உடன்படிக்கை செய்யாத 20 உப வாடிக்கையாளர்களுக்குமாக பேருந்து நிலையம் அருகில் தற்காலிக கடைகளை வழங்கும் போது மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2017 திசெம்பர் 06 ஆந் திகதிய LGD/06/02/04பொது ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுக்காமல் கடை வாடகை பதிவேட்டில் நீண்டகாலம் முதல் கொண்டுவரப்படுகின்ற மாதாந்த வாடகையை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்பட்டமையால் சபைக்கு ரூபா 4,848,000 நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன் இதற்காக | மதிப்பீட்டு அறிக்கை 2019 திசெம்பர் 09 ஆந் திகதி கிடைத்தமையினால் காணப்பட்ட கடை வாடகையை அடிப்படையாகக் கொண்டு 60 மாத வாடகை அறவிடுதல் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்ததுடன் 20 கடைகளின் வாடகையாளர்களின் பெயர்கள் திருத்தப்பட்டு அதற்காக ஆளுனரின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது என அறியத்தருகின்றோம். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் அங்கீகாரத்திற்காக சரியான தகவல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆளுனரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அனுப்பப்பட்டிருந்த பட்டியலில் வருமானப் பரிசோதகரின் பட்டியலில் உள்ளடக்கப்படாத 05 வாடகையாளர்களின் தகவல்கள் போலியாக உள்ளடக்கப்பட்டிருந்தது. 2021 பெப்ரவரி 18 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது கடைகளின் எண்ணிக்கையில் 50 சதவீதத்திற்கு அதிகமான எண்ணிக்கை உடன்படிக்கை செய்த உப வாடகையாளர்கள் அல்லாதவர்களினால் வியாபாரங்கள் நடாத்திச் செல்லப்பட்டிருந்ததுடன் அவர்களிடமிருந்து ரூபா 15,000 - ரூபா 20,000 வரை மாதாந்த வாடகையொன்று உப வாடகையாளர்களினால் வாடகையாளர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. | | |
| (ஆ) | பொதுச் சந்தை கட்டிடத் தொகுதியில் புதிய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக அதற்கு முன்னர் உடைத்து அகற்றப்பட்ட பழைய வாராந்த சந்தை நிலத்தில் கிரவல் மண் நிரப்பி தயாரிப்பதற்கு 1002 கிரவல் கியூப்கள் பயன்படுத்தப்பட்டதாக தொழில்நுட்ப உத்தியோகத்தர் கணிப்பிட்டு அறிக்கையிட்டிருந்தார். 2019 - 2020 புதிய நிர்மாண காலத்தில் அந்த நிரப்பப்பட்ட மண் மற்றும் அகழ்வுகளிலிருந்து அகற்றப்பட்ட மண்ணுடன் 717.97 கியூப் மண் அந்த வேலைத்தளத்திலிருந்து மண் அகற்றப்பட்டு போக்குவரத்து செய்யப்பட்டமைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இந்த மண்ணை அகற்றுதல் | அந்த மண் அளவின் ஒரு பகுதி மத ஸ்தலம் மற்றும் நற்கரும நடவடிக்கை செயற்பாட்டு நிலைய இடங்கள் சிலவற்றிற்கும் மற்றும் சபைக்குச் சொந்தமான காணியொன்றிலும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது என அறியத்தருகின்றோம். | உடன்படிக்கையில் உள்ளடக்கி வெளிப்படையாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மற்றும் போக்குவரத்து தொடர்பாக நிர்மாணக் கம்பனியுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை.
ஒப்பந்தக் கம்பனியினால் இந்த நிலத்தில் அகற்றப்பட்ட மண் அவர்களின் நிர்மாணத்தை நிரப்புவதற்கான நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தாதிருந்ததாக எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருக்கும் போது வேலைத்தளத்திலிருந்து மண் அகற்றுதல் மற்றும் அவற்றை வேறிடத்திற்கு கொண்டு வருதல் தொடர்பாக முறையான ஆவணப்படுத்தப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.